

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி தலைமையில் தலைமைக் கழக பிரதிநிதிகள் முனைவர் சபாபதிமோகன், உடுமலை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் உடுமலை ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு கழக மறு சீரமைப்பு செயற்குழு கூட்டம் நடைபெற்றது.கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### “கல்லாப்பெட்டிக் கூட்டணி” என்று வர்ணிக்கப்பட்டக் கட்சிகளை அழைத்து

# மக்களின் செல்வாக்கைப் பெற்று விடலாம் என்று கனவுக் காணாதீர்கள் முதல்வரே!

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கடும் தாக்கு!



நெல்லை,செப்.13-

“கல்லாப்பெட்டி கூட்டணி” என்று வர்ணிக்கப் பட்ட கட்சிகளை அழைத்து “மதச் சார்பற்ற சமூகநீதி வெற்றி கூட்டணி” என்ற பெயர் மாற்றம் செய்தாலேயே மக்களின் செல்வாக்கை பெற்று விடலாம் என்று கனவு காணாதீர்கள் CMsir? என சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

அதில் அவர் கூறி யிருப்பதாவது.

த.வெ.க.ஆட்சி அமைந்த 100 நாட்களுக்குள் மக்களின் கோபம், இளைஞர்களின் அதிருப்தி,பெண்களின் சாபம்,விவசாயிகளின் கண்ணீர்,அரசு ஊழியர்களின் ஆவேசம் ஆகியவற்றால் செல்வாக்கு சரிந்து வருவதை உணர்ந்து இடைத்தேர்தலில் பழைய பருப்பு வேகாது என்பதற்காக உங்களால் “கல்லாப் பெட்டி கூட்டணி” என்று வர்ணிக்கப்பட்ட கட்சிகளை அழைத்து “மதச்சார் பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி” என்று பெயர் மாற்றம் செய்தாலேயே மக்களின் செல்வாக்கை பெற்று விடலாம் என்று கனவு காணாதீர்கள் CMsir?

நேற்று தங்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் முடிந்த பின்பு கூட்டத்தின் நோக்கம் குறித்தோ,பிரதமர் வேட்பாளர் குறித்தோ, இடைத்தேர்தலில் போட்டியிடுது குறித்தோ பத்திரிகையாளர்களைச் சந்தித்து பேச துணிவில்லாமல்,கூட்டணி கட்சி தலைவர்கள் தங்கள் விருப்பப்படி கருத்துச் சொல்லி கொள்ளுங்கள் என்று அவர்களை அவமதித்திப்பது,உங்கள் “நரித்தனத்தின் வெளிப்பாடு” என்பது நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும் CMsir ?

இந்தியாவில் அரசியல் அமைப்பு சட்டம், பத்திரிக்கை சுதந்திரம்,கருத்து சுதந்திரம், மக்களின் உரிமைகளுக்கு எதிரான அன்னை இந்திரா அவர்களால் கொண்டுவரப்பட்ட நெருக்கடி நிலையை அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் எதிர்த்து குரல் கொடுத்ததால் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் சித்திரவதை அனுபவித்த தியாக வரலாற்றை சட்டமன்றத்தில் கேலி செய்து கூத்தடிக்கும்,பண்பில்லா, அறிவில்லா, நாகரிகமில்லா கூத்தாடிக்கு முதல்வர் பதவி ஒரு கேடா?

ஒருமுறை ஆந்திர முன்னாள் முதல்வர் மறைந்த என்.டி.ராமராவ் அவர்கள் வெளிநாடு பயணம் சென்று திரும்புவதற்குள் சந்திரபாபு நாயுடு அவர்கள் ஆட்சியை கவிழ்த்து முதல்வரானது போல் ஆதவ்அர்ஜுனா முதல்வராகிவிடக்கூடாது என்ற பயத்தில் உங்களோடு லண்டன் அழைத்து செல்கிறீர்களா CMsir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# நாகை மாவட்டத்தில் கழக மறுசீரமைப்பை சிறப்பாக செய்திடுவோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

நாகை, செப். 13-

நாகை மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடை பெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். முன்னாள் அமைச்சர் மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ் கே.வேதாரத்தினம், தலைமை செயற் குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராஜன், க.ராஜேந்திரன், இல.மேகநாதன், மாவட்ட கழக பொருளாளர் மு. லோகநாதன். ஆகியோர் முன்னிலை வைத்தனர். மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர். மணிவண்ணன் வரவேற்றார்.

கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறை வேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும், நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் பேசினார். அதைத் தொடர்ந்து தலைமையில்

தலைமைக் கழக பிரதிநிதிகளான மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினர் பி.எஸ்.சீனிவாசன்

மதுரை தெற்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளமகிழன் ஆகியோர் 22.08.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி கழகம் மறுசீரமைப்பு குறித்தும், ஒன்றிய நகர, பேரூர், கிளை ,வார்டு புதிதாக அமைப்பது குறித்து விளக்கம் அளித்து பேசினார்கள்.

கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன், தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார். மாநில மாற்றுத்திறனாளிகள் அணி துணைச் செயலாளர் அம்பல் குமார்,

மாவட்ட கழக துணை செயலாளர்கள் சோ.ரவிச் சந்திரன், கற்பகம் .

ஒன்றிய கழக செயலாளர் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், மகா.குமார், ஆர். டி. எஸ்.சரவணன், செல்வ, செங்குட் டுவன், கே. பழனியப்பன், சோ.பா. மலர்வண்ணன், என்.சதாசிவம், சிக்கல் என்.ஆனந்த், உதயம் வே.முருகையன், நகர கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா. மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்கு மார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி. சார்லஸ், இல.பழனியப் பன், கோ.சிவகுமார், எஸ்.பன்னீர் செல்வம், உமா செந்தாமரைச்செல் வன், பேரூர் கழக செயலாளர்கள் கா. அட்சலிங்கம், சி.சுப்பிரமணி யன். முகமதுசுல்தான். மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இரா. முருகையன், பி.என். கார்த்தி, ப.உதயகுமார், அ.பாரிபாலன், ஆர்.ஏ.டி. அண்ணாதுரை. ஆர்.துரைராஜ், கேஸ் வீ.செந்தில், பெ.முருகானந்தம். எஸ். பால்ராஜ், க.சத்தியமூர்த்தி, த. தமயந்தி, வ.காமல், ஆர், ஆர். குலோத்துங்கள், புவனேஸ்வரி செந்தில், வெற்றிவேல், இளம்.சுந் தர், பால முரளி, ஆர்.சுரேந்தர் எஸ். சந்தோஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ். டேனி யல் சத்யா, கே.சுரேஷ். தாமோதரன், டி.எஸ். அசோக் ஆகியோர் கலந்து கொண்ட னர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சண்டை அண்ணா அறிவாலயத்தில் 22.08.2026 அன்று நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி கநாகை மாவட்டத்தில் கழகம் மறுசீரமைப்பு செய்திடுவது என்றும், செப்டம்பர் 15 அன்று சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் நாகை மாவட்டத்தில் இருந்து பெரும் அளவில் கலந்து கொண்டு சிறப்பிப்பது என்றும் தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டு விருது பெற உள்ள அனைத்து கழகத்தினருக்கும் நாகை மாவட்ட செயற்குழு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வது என்றும் செப்டம்பர் 15ஆம் தேதி அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர,பேரூர் பகுதியில் உள்ள கிளை வார்டுகள் தூரம் அண்ணா படங்களை வைத்தும், அண்ணா சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்துவது என்றும், சட்டமன்றத்தில் நிர்வாக திறமையற்ற முதல்வர் விஜய் கழகத் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களை அவதூறாக பேசிய விஜய்க்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.



கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், குள்ளக்காபாளையம் ஊராட்சியில் கழக நெசவாளர் அணி செயலாளர் கே.எம்.நாகராஜ் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் பொள்ளாச்சி வடக்கு கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.மருதவேல் முன்னிலையில் புதுப்பிக்கப்பட்ட கலைஞரின் சிலைக்கு புகழஞ்சலி செலுத்தி நலத்திட்ட உதவிகளை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி வழங்கினார். இதில் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர், வால்பாறை நகர கழகச் செயலாளர் குட்டி (ஏ) ஆ.சுதாகர், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணை செயலாளர் டாக்டர் மகேந்திரன், கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, மாவட்ட அவைத் தலைவர் மயூரா சுப்பிரமணியன், பொருளாளர் ஜெயபிரகாஷ், பொள்ளாச்சி தெற்கு நகர கழக செயலாளர் அமுதபாரதி, ஒன்றிய செயலாளர்கள் ரமேஷ் (பொள்ளாச்சி வடக்கு மேற்கு), சிபி.கே.செந்தில்குமார் (சூலூர் வடக்கு), ஏ.வி.அன்பரசு (சூலூர் மேற்கு) உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




சேலம் ஒருங்கிணைந்த மாவட்டம் சேலம் மத்திய கிழக்கு, மேற்கு மாவட்டத்தின் சார்பில் சேலம் கோட்டை மைதானத்தில் சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய்யின் ஆணவப்பேச்சைக் கண்டித்து கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி தலைமையில் மாவட்ட செயலாளர்கள். இரா.இராஜேந்திரன், எஸ்.ஆர் சிவலிங்கம் எம்.பி., டி. எம். செல்வகணபதி ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது ஆர்பாட்டத்தில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்.

### செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பு!

## மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!



புதுக்கோட்டை,செப்.13-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே. கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ்மொழி உயர்வுக்காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ் நாட்டின்சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ்நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுயமரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 118 வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2026 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

அது சமயம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள்,

உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாது தமது அறிக்கையில் கூறி உள்ளார்.



நாகை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டச் செயலாளர் கௌதமன் பேசினார். உடன் தலைமைக் கழக பிரதிநிதிகளான மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினர் பி.எஸ்.சீனிவாசன் மதுரை தெற்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளமகிழன், முன்னாள் அமைச்சர் மதிவாணன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



11.09.2026 அன்று தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சில பகுதிகளை த.வெ.க.அரசு தனியார் மையம் ஆக்குவதை கண்டித்து சென்னை அண்ணா சாலை மின்வாரிய தலைமை அலுவலகம் முன்பு பா. மணிமாறன் (பொதுச் செயலாளர் மின்கழகத் தொ.மு.ச.) தலைமையில் தொ.மு.ச. பேரவைச் செயலாளர் தனசேகரன் முன்னிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மின்கழகத் தொமுச நிர்வாகிகள், மாநில துணை பொதுச் செயலாளர் ஆர் ராமமூர்த்தி, மாநிலத் துணைத் தலைவர் மு. சடாச்சரம், மாநில சிறப்பு தலைவர் பி பாக்கியநாதன், மாநில அமைப்பு செயலாளர் எம்.பாஸ்கரன், மாநில முதன்மைச் செயலாளர் ஏ.பாபுராஜ், மாநில தொழிலாளர் நல செயலாளர்கள் ஆர்.ராஜேந்திரன், வேதசுதந்திரராஜன், வி.ரவி, வட்டார செயலாளர் கே.விநாயகமூர்த்தி, ஆர்.கௌரிசங்கர், டி.தியாகராஜன் திட்டச் செயலாளர்கள் கே.சசிகுமார், டி.அல்லிமுத்து, எஸ். குகானந்தன், எ. ரவீந்திரபாபு, டி.கே.மணிகண்டன், மாநில பிரச்சார செயலாளர்கள் பொன் சீனிவாசன், டி.ரமேஷ்பாபு அலுவலக செயலாளர்கள் லோகநாதன், டி.தேசிங்கு, ஜே.மோகன்ராஜ், மகளிர் அணி டி.சுமதி, தகவல் தொழில்நுட்ப அணி எம்.விக்னேஸ்வரன் கலந்து கொண்டனர், இறுதியாக மாநில பொருளாளர் தே.முரளிகுமார் நன்றி உரையாற்றினார்.